மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற **Crl.OP (MD) No. 15676/2024** ல் **26.09.2024** அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது பூர்வீகம் திருச்சி, அண்ணாநகர் ஆகும். நான் கரூர் வந்து ஐந்தாறு வருடங்களாகிறது. கரூர், தளவாப்பாளையம், கோழிப்பண்ணை என்ற பகுதியில் வசித்து வருகிறேன். என் மகன் அவர் விருப்பப்பட்டு, காதல் திருமணம் செய்துக்கொண்டார். அவர் இறப்பதற்கு 10 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்தார். இந்திராணி என்பவரை நான் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன். இந்திராணி திருச்சியை சேர்ந்தவர். என் முதல்மனைவி காளியம்மாள் என்பவருக்கும், எனக்கும் விவாகரத்தாகவில்லை. அவர் தனியாக திருச்சி, அண்ணாநகரில் வசித்து வருகிறார். நான் அங்கு போக வர உள்ளேன். என் மகன் ரஞ்சித்குமார் என் முதல் மனைவி காளியம்மாள் மூலம் பிறந்த மகன். என் மகனுக்கு திருமணமாகி, திருச்சியில் தனியாக குடியிருந்து வந்தார். சம்பவத்திற்கு முன்பு மூன்று வருடங்களாக என் மகன் கரூரில் அவர் மனைவியுடன் வசித்து வந்தார். அவர் எலக்ட்ரீசியன் தொழில் செய்வதற்கு தனியாக படிக்கவில்லை. 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவ்வழக்கு சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு, வேறு வழக்கு சம்மந்தமாக என் மகன் கரூர், கிளைச்சிறையில் இருந்தார். குடும்ப தகராறு காரணமாக அந்த வழக்கு ஏற்பட்டது. அந்த வழக்கு என் மகனின் மனைவி கொடுத்த புகாரின்பேரில் பதிவு செய்யப்பட்டது. என் மகன் திருச்சியில் குடியிருந்தபோது, அவர் மீது நிறைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. 2, 3 அடிதடி வழக்குகள் இருந்தன. கூட்டுக்கொள்ளை செய்ததாக என் மகன் மீது வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. கூட்டுக்கொள்ளை வழக்கில் ஈடுபட்ட நபர்களுக்கும், என் மகனுக்கும் பணம் பிரிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகன் கரூரில், மூலிமங்கலத்தில் முதலில் வசித்து வந்தார். அங்கு ஒரே வீட்டில் வசித்து வந்தார். என் மகன் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்யவில்லை. சாட்சி வான்மதியின் கணவர் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. வான்மதியின் கணவரை, என் மகன் அடித்துவிட்டார் என்றால் அது

எனக்கு தெரியாது. லோகநாதன் என்பவரை எனக்கு யாரென்று தெரியாது. சாட்சி வான்மதியை எனக்கு தெரியும். என் மகன் வான்மதியுடன் தவறான உறவில் இருந்து வந்தார் என்றும், அதனால் என் மகனுக்கும், வான்மதியின் கணவர் லோகநாதனுக்கும் தகராறு ஏற்பட்டு, விரோதம் இருந்து வந்தது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகனுக்கும், அவரது மனைவி புனிதவள்ளியின் சகோதரருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

என் மகன் இறந்தது சம்மந்தமாக எனக்கு போன் மூலமாக தகவல் வந்தது. எனது போனை வாங்கி போலீசார் பார்த்தனரா என்றால் இல்லை. என் உறவினர்களுக்கு நான் போன் மூலம் தகவல் கொடுத்தேன். எனக்கு தகவல் கிடைத்து, நான் சம்பவ இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் இரவு 7.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்திலிருந்து என் வீடு சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. சம்பவத்தன்று நான் வீட்டில் இருந்தேன் என்றால் வேலைக்கு சென்றிருந்தேன். கரூருக்கு வேலைக்கு சென்றிருந்தேன். நான் என் மகனை கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு இரவு 7.00 – 8.30 மணிக்கு சென்று பார்த்தேன். அப்போது, கரூர், அரசு மருத்துவமனையில் வேலாயுதம்பாளையம் போலீசார் இருந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது வேலாயுதம்பாளையம் போலீசார் இருந்தார்களா என்றால் இல்லை. நான் முதன்முதலில் வேலாயுதம்பாளையம் போலீசாரை, காவல்நிலையத்தில்தான் பார்த்தேன்.

கரூர் - சேலம் தேசிய நெடுஞ்சாலையில் வேலாயுதம்பாளையம் உள்ளது. அந்த பகுதி எனக்கு ஓரளவுக்கு தெரியும். வேலாயுதம்பாளையம் பகுதியில் கரூர் - சேலம் ரோடு கிழமேலாக செல்கிறது. அந்த ரோட்டிற்கு வடக்குபக்கம் புகளூர் செல்லும் சாலை உள்ளது. தெற்குபக்கம் மூலிமங்கலம் செல்லும் சாலை உள்ளது. மூலிமங்கலம் செல்லும் சாலையில் கிழக்கு பக்கம் 1 கி.மீ. தூரத்தில் காவல்நிலையம் உள்ளது. மூலிமங்கலம் சாலையிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் கரூர் சாலையில் ஒயின்ஷாப் உள்ளது.

என் மகனுக்கு சிறுவயதிலிருந்து குடிப்பழக்கம் உண்டு என்றால் இடையில் வந்தது. சம்பவத்தன்று என் மகன் ஒயின்ஷாப்பில் குடிப்பதற்காக சென்றார் என்றால் இல்லை. இவ்வழக்கில் போலீசார் நான் புகார் கொடுத்தபோது என்னை விசாரித்தனர். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது, நான் இந்து, போயர், நாயக்கர் சாதியை சேர்ந்தவர் என்று கூறினேன் என்றால் சரியல்ல. நான் பட்டியல் சாதியை சேர்ந்தவர் இல்லை என்றும், இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக எனது சாதியை மாற்றி கூறி, சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என் மகள் சுகுணா வழக்கறிஞராக பணிபுரிகிறார் என்றால் முன்பு பணிபுரிந்தார். தற்போது இல்லை. நான் 6 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்கத் தெரியாது. புகாரை காவல்நிலையத்தில் வைத்து என் மகள் சுகுணா எழுதினார். வழக்கு சம்பவ சமயத்தில், என் மகள் சுகுணா வழக்கறிஞராக நீதிமன்றத்தில் பணிபுரிந்தார் என்றால் இல்லை. புகார் பின்னிட்டு, என் மகளால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

இவ்வழக்கு குறித்து காவல்நிலையத்திற்கு முதலில் தகவல் கிடைத்துவிட்டது என்றும், அதை மறைத்து அ.சா.ஆ.1 புகார் தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகனை அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத ஆட்களால் ஏற்பட்ட காயத்தை வைத்து, பின்னிட்டு, அ.சா.ஆ.1 புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

1 ம் எதிரிக்கும், என் மகனுக்கும் ஏற்பட்ட பிரச்சினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் மகன் சொல்லி எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தபோது, என் மகன் சொல்லி அந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தபோது, எதிரிகள் அளித்த வாக்குமூலத்திலிருந்தும், வான்மதி சொன்னதின் பேரிலும், என் மகனுக்கும், எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதம் குறித்து தெரிந்துக்கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் 2ம் திருமணம் செய்துக்கொண்டதால், என் மகனுக்கும், எனக்கும் நல்ல உறவு கிடையாது என்றும், நானும், என் மகனும் பேசிக்கொள்வதில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது, என் மகனின் செல்போன் எண்ணை கேட்கவில்லை. என் மகன் கடைசியாக எந்த வீட்டில் வசித்து வந்தார் என்றால் வான்மதி வீட்டில் வசித்து வந்தார். வான்மதிக்கும், என் மகனுக்கும் பழக்கம் ஏற்பட்டு, தவறான உறவு இருந்தது. அதனால் என் மகனின் மனைவி, கோபித்துக்கொண்டு, அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். என் மகன் பெண்கள் விசயத்தில் தவறாக நடந்துக்கொண்டதால், அவருக்கு பல முன்விரோதங்கள் இருந்தது என்றால் சரியல்ல. என் மகன் எலக்ட்ரீசியன் வேலை எதுவும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் மகன் ஊரில் ரவுடித்தனம் செய்து, மாமூல் வாங்கி, பிழைப்பு நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. என் மகனுக்கும், எதிரிகளுக்கும் எந்தவித பிரச்சினையும் கிடையாது என்றும், வழக்கிற்காக முன்விரோதம் உள்ளது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் சம்பவம் பற்றி தெரிந்துக்கொள்ளவில்லை என்றும், புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற **Crl.OP (MD) No. 15676/2024** ல் **26.09.2024** அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு**, 1, 4, 5** மற்றும் **8** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பணிபுரிந்த புஞ்சைபுகளூர் வடக்கு கிராம நிர்வாக அலுவலகம் வேலாயுதம்பாளையத்தில் உள்ளது. எனது பணிநிமித்தம், நான் பணிபுரியும் கிராமத்திலேயே தங்கி பணிபுரியவேண்டும் என்ற விதி உள்ளது என்றால் சரிதான். எனது எல்லைக்குட்பட்ட கிராமத்தில் குற்ற நிகழ்வு குறித்து, எனக்கு தகவல் கிடைக்கும்போது, அதை பதிவேட்டில் பதிவு செய்து, எனது உயரதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து, எனது அலுவலகம் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. சம்பவத்தன்று நான் எனது அலுவலகத்தில் இருந்தேன். சம்பவம் நடக்கும்போது, சம்பவம் குறித்து எனக்கு தகவல் வந்ததா என்றால் பொதுமக்கள் பேசிக்கொண்டிருந்தனர். அதன்மூலம் சம்பவம் பற்றி தெரிந்துக்கொண்டேன். நான் சம்பவ இடத்திற்கு 5.30 – 6.00 மணிக்கு சென்றேன். அப்போது போலீசார் யாரும் இல்லை. சம்பவம் குறித்து எனது உயரதிகாரிகளுக்கு நான் தெரிவித்தேன். குற்ற வழக்கு சம்மந்தமாக நான் வெளியே செல்லும்போது அதிகாரியிடம் நான் அனுமதி வாங்கி செல்ல வேண்டும். போனில் தகவல் கொடுத்துவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடத்தில் முதன்முதலில் நான் எப்போது போலீசாரை பார்த்தேன் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காலையில் பார்த்தேன். நான் மறுநாள் காலையில் சம்பவ இடத்திற்கு சென்றபோது, பாரா காவலர்கள் அங்கிருந்தனர். என் உதவியாளர் என்னுடன் இருந்தார். வேலாயுதம்பாளையம் பைபாஸ் பஸ்டாப் என்பது கரூர் - சேலம் நெடுஞ்சாலையில் உள்ளது. மூர்த்திபாளையம் என்பது வேலாயுதம்பாளையம் பைபாஸ் பஸ்டாப்பிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. மூர்த்திபாளையம் பகுதிக்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி உள்ளார். அங்கு ஏழு கன்னிமார் கோவில் உள்ளது. ஏழு கன்னிமார் கோவில் கரூர் - வேலாயுதம்பாளையம் ரயில்வே தடத்திற்கு அருகில் உள்ளது. ரயில்வே தடத்திற்கு இருபுறமும் விவசாய நிலங்கள் உள்ளன. அந்த விவசாய நிலங்களில் ஆட்கள் விவசாய வேலை செய்துக்கொண்டிருப்பார்கள். அங்குள்ள முட்புதர் ......

யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. வேலாயுதம்பாளையம் பைபாஸ் பஸ்டாப்பில் இருபக்கங்களிலும் கடைகள் உள்ளன. ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி. நான் செல்வதற்கு முன்பே எதிரியை போலீசார் கைது செய்து வைத்திருந்தனர்.

போலீசார் என்னை விசாரித்தபோது, எதிரிகள் மணிகண்டன், சீனிவாசன் ஆகியோரை மூர்த்திபாளையம், ஏழு கன்னிமார் கோவில் அருகில் உள்ள முட்புதருக்கு அழைத்துச்சென்றனர் என்று கூறியுள்ளேன். மணிகண்டன், சீனிவாசன் ஆகியோர் அங்கிருந்த முட்புதரிலிருந்து கத்தியை எடுத்துக்கொடுத்தனர். எதிரிகள் மணிகண்டன், சீனிவாசன் ஆகியோர் வேலாயுதம்பாளையம் பைபாஸ் பஸ்டாப்பில் வைத்து கைது செய்யவில்லை என்றும், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றும், அதனடிப்படையில் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி உதயநிதி என்பவரை காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன். எதிரி உதயநிதி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றும், அதனபடிப்படையில் சான்றுபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.</u>**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 48/2021 | |
| | : | Prosecution - | **PW-36** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 04th day of January 2025.

**(3** ம் எதிரி **M.**பிரசாத்**, 4** ம் எதிரி ஷேக்தாவுத்**, 5** ம் எதிரி கோகுல்நாத்**, 6** ம் எதிரி கிரிதர் **(**எ**)** கிரி**, 8** ம் எதிரி சீனிவாசன் **(**எ**)** சீனு ஆகிய **1, 3** முதல் **6** மற்றும் **8** ம் எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்**)**

**(1** ம் எதிரி கலையரசன் ஆஜர் இல்லை**. 1** ம் எதிரி சார்பில் குவிமுச பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு**,** மனு அனுமதிக்கப்பட்டது**)**

**(2** ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என **Crl.M.P.208/2024** உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது**).**

**(7** ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** கூல்மணி**, 9** ம் எதிரி உதயநிதி **(**எ**)** சூர்யா ஆகிய **7** மற்றும் **9** எதிரிகளுக்கான வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு**, Spl.SC. 21/2023** என்று தனியாக வழக்கு நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது**)**

முதல் விசாரணை

நான் தற்போது பெட்டவாய்த்தலையில் வசித்து வந்து, சலூன்கடையில் வேலை பார்த்து வருகிறேன். சாட்சி அரசக்குமார் என்பவரை எனக்கு தெரியும். அவர் வேலாயுதம்பாளையத்தில் SK சலூன் என்ற பெயரில் முடிதிருத்தும் கடை வைத்துள்ளார். அந்த கடையில் நான் 2020ம் வருடத்தில் வேலை பார்த்து வந்தேன். சாட்சி முருகானந்தம் என்பவரை எனக்கு தெரியும். ரஞ்சித்குமார் என்பவர் நான் வேலைபார்த்த அரசக்குமாரின் சலூன்கடைக்கு வந்துசெல்வார். அவர் கடந்த 16.12.2020 அன்று நான் வேலை பார்த்து வந்த அரசக்குமாரின் சலூனுக்கு பகல் சுமார் 12.00 மணியளவில் வந்தார். ரஞ்சித்குமாரின் இருசக்கர வாகனத்தை ஸ்டேண்டில் நிறுத்திவிட்டு, சாவியையும், ஸ்டேண்டில் கொடுத்த ரசீதையும் கடையில் என்னிடம் கொடுப்பதற்காக வந்து, என்னிடம் கொடுத்தார். அப்போது அவர் முசிறிக்கு செல்கிறேன் என்று சொல்லி சாவியையும், ரசீதையும் என்னிடம் கொடுத்தார். மறுநாள் நான் சலூன் கடை வேலைக்கு செல்லவில்லை. விடுப்பில் இருந்தேன். அன்றைய தினம் சாட்சி முருகானந்தம் என்பவர் வீட்டில் நான் இருந்தபோது, அரசக்குமாரும், ரஞ்சித்குமாரும் பகல் சுமார் 2.30 மணியளவில் முருகானந்தம் வீட்டிற்கு வந்தனர். நான் என்னிடமிருந்த சலூன் கடை சாவியை அரசக்குமாரிடம் கொடுத்தேன். அரசக்குமாரும், ரஞ்சித்குமாரும் சலூன்கடைக்கு சென்று, அங்கிருந்த ரஞ்சித்குமாரின் சாவியையும், ரசீதையும் எடுத்துக்கொண்டு சென்று, வண்டியை எடுத்துக்கொண்டு, முருகானந்தம் வீட்டிற்கு வந்தனர். நானும், முருகானந்தமும் அவர்களுடன் மூலிமங்கலம் பிரிவில் உள்ள டாஸ்மாக் கடைக்கு சென்றோம். ரஞ்சித் ஓட்டிச்சென்ற பல்சர் வாகனத்தின் பின்இருக்கையில் நான் அமர்ந்து சென்றேன். அரசக்குமார் அவரது வண்டியை ஓட்டி வந்தார். அதில் பின்இருக்கையில் முருகானந்தம் அமர்ந்து வந்தார்.அரசக்குமாரும், முருகானந்தமும் டாஸ்மாக் கடைக்கு ......

அருகில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் நிற்குமாறு சொல்லிவிட்டு, டாஸ்மாக் கடைக்கு நானும், ரஞ்சித்குமாரும் சென்று மதுபானம் வாங்க சென்றோம். டாஸ்மாக் கடையில் நானும், ரஞ்சித்குமாரும் மதுபானம் வாங்கிவிட்டு, அதற்கு அருகில் உள்ள பேக்கரிக்கு தண்ணீர் பாட்டில் வாங்குவதற்காக சென்றோம். இருசக்கர வாகனத்தை விட்டு, நான் இறங்கி சென்றேன். ரஞ்சித்குமாரும் வண்டியிலிருந்து இறங்கி நின்றார். அப்போது ஒரு கும்பல் இருசக்கர வாகனங்களில் என்னை கடந்து சென்று, ரஞ்சித்குமாரை துரத்திச்சென்றனர். அவர்களை பார்த்து, ரஞ்சித்குமார் ஓடினார். அவரை துரத்திச்சென்ற கும்பல் பேக்கரிக்கு முன்பாக அவரை வெட்டினார்கள். நான் அதை பார்த்து பயந்துபோய், இருசக்கர வாகனத்திலிருந்த மதுபானத்தை எடுத்துக்கொண்டு, பெட்ரோல் பங்கிற்கு அரசக்குமாரிடம் சொல்வதற்காக ஓடினேன். அங்கிருந்து நான், அரசக்குமார், முருகானந்தம் ஆகியோர் சென்றுவிட்டோம். என்னை ஹைஸ்கூல் மேட்டில் இறக்கிவிட்டுவிட்டு, அவர்கள் இருவரும் சென்றுவிட்டனர். அதன்பிறகு எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டைச்சேர்ந்தவர் ரஞ்சித்குமார் இறந்துவிட்டார் என சொன்னார். மறுநாள் காவல்நிலையத்திற்கு வரவழைத்து போலீசார் என்னை விசாரித்தனர்.

சம்பவத்தன்று ரஞ்சித்குமாரை துரத்திச்சென்று வெட்டிய கும்பலில் இருந்தவர்களை நான் சரியாக பார்க்கவில்லை. அவர்களை அடையாளம் காட்ட இயலாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

கடந்த 17.12.2020 அன்று மதியம் 2.30 மணிக்கு நானும், ரஞ்சித்குமாரும் மதுபானக்கடையில் மது வாங்கிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது எதிரி கலையரசன் அங்கு வந்து, எங்களை பார்த்தவுடன் வேகமாக திரும்பி சென்றார் என்றும், நானும், ரஞ்சித்குமாரும் சரக்கு வாங்கிவிட்டு, தண்ணீர் டம்ளர் வாங்க 91 காபி கபே பேக்கரிக்கு ரஞ்சித்குமாருடன் வண்டியில் வந்து இறங்கினேன் என்றும், அப்போது திடீரென மூன்று வண்டியில் எட்டு பேர் வந்து இறங்கினார்கள் என்றும், அதில் கலையரசன் வண்டியிலிருந்து இறங்கி, ரஞ்சித்குமாரிடம், "எதுக்குடா நான் கல்யாணம் பண்ணினா என் பொண்டாட்டியை உனக்கு கொடுக்கணும்" என்று கேட்டார் என்றும், அப்போது வண்டியிலிருந்து இறங்கிய ஒருவர் வாள் கத்தியால் ரஞ்சித்குமாரின் பின்தலையில் வெட்டினார் என்றும், வெட்டுப்பட்ட ரஞ்சித்குமார் கடை பக்கம் ஓடினார் என்றும், ஒருவர் ரஞ்சித்குமாரின் பின்னால் ஓடிச்சென்று, ரஞ்சித்குமாரின் காலில் தடுக்கி, கீழே விழவைத்தான் என்றும், விழுந்தவுடன் பின்னால் வந்த இரண்டு நபர்கள் கையில் வைத்திருந்த வீச்சருவாள், வாள் கத்தியால் இரண்டு பேரும் மாறி மாறி ரஞ்சித்குமாரின் முகத்தியிலும், கையிலும், தலையிலும் வெட்டினார்கள் என்றும், அவர்கள் வெட்டியதும், அவர்களிடமிருந்த கத்திகளை வாங்கிக்கொண்டு இரண்டு பேர் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், அப்போது வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த கலையரசன், பிரசாத், கோகுல்நாத், ஷேக்தாவூத் மற்றும் அவருடன் வந்த மூன்று நபர்களும் ரஞ்சித்குமாரை வெட்டிவிட்டு, வண்டியில் ஏறி, கரூர் நோக்கி பைபாஸ் ரோட்டில் சென்றுவிட்டனர் என்றும், பின்னர் நான் ........

பெட்ரோல் பங்கிற்கு ஓடிச்சென்று அங்கிருந்த எனது ஓனர் அரசக்குமார் மற்றும் முருகானந்தத்திடம் மேற்சொன்ன விவரத்தை சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகி, இல்லை என தெரிவித்தார்.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்